# முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்!

# விடியல் பயிற்சி மையம்
## வேலூர்

செல் : 9092997509, 8122706441
www.vidiyalarni.blogspot.in

இங்கு வெளியிடப்பட்டுள்ள TNPSC GROUP IV குறித்த வினாக்களுக்கான விடைகள் அனைத்தும் விடியல் பயிற்றுநர் குழுவின் கணிப்பே. TNPSC-ஆல் வெளியிடப்படும் விடைகளே முடிவானவையாகும். எனினும் இந்த Group IV தேர்வின் Cut-off மதிப்பெண்ணைக் கணித்திட எமது www.facebook.com/vidiyal.vellore என்ற முகநூல் பக்கத்தின் பின்னூட்டத்திலும், மற்றும் vidiyalvarum@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் உங்களின் score விவரங்களை பெயர், இட ஒதுக்கீட்டுப் பிரிவு, ஊர் உள்ளிட்ட விவரங்களுடன் பதிவு செய்யுங்கள். கட்-ஆஃப் விவரங்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் எமது Blog-லும், முகநூலிலும் வெளியிடப்படும்

Visit us @ www.vidiyalarni.blogspot.in

Follow us @ www.facebook.com/vidiyal.vellore

## ANSWER KEYS FOR TNPSC - GROUP IV EXAM HELD ON 11.02.2018

### பொதுத்தமிழும் பொது அறிவும்

1. "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்" - என இளைஞர்களுக்கு உரைத்தவர் யார்?

   A) தமிழ்த் தென்றல் திரு.வி.க. **B) பெரியார்**

   C) பாவேந்தர் பாரதிதாசன் D) தாரா பாரதி

2. குமரகுருபரரின் 'நீதி நெறி விளக்கம்' என்னும் நூலில் எத்தனை பாடல்களுக்கு பரிதிமாற்கலைஞர் உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்?

   A) முப்பத்து மூன்று B) ஐம்பது

   **C) ஐம்பத்தொன்று** D) ஐம்பத்து மூன்று

3. தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழமையானது எங்குள்ளது?

   **A) பிள்ளையார்பட்டி** B) குழுகு மலை

   C) திருப்பரங்குன்றம் D) ஆனைமலை



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

4. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை - என்று பாடியவர் யார்?

A) பாவேந்தர் பாரதிதாசன் B) உமர் கய்யாம்

C) இரசூல் கம்சு தோவ் D) க. வைரமுத்து

5. 'நோய்க்கு மருந்து இலக்கியம்' என்று கூறியவரை தேர்வு செய்க.

A) உ.வே. சாமிநாதர் B) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

C) பரிதிமாற்கலைஞர் D) மறைமலை அடிகளார்

6. "கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்" என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

A) திருவாசகம் B) மதுரைக் காஞ்சி C) பட்டினப்பாலை D) தமிழ்விடுதூது

7. தமிழ், வடமொழி அல்லாது மற்றொரு மொழியிலும் குமரகுருபரர் புலமை மிக்கவராக திகழ்ந்தார். அம்மொழி எதுவெனத் தேர்ந்தெடு

A) பாலி B) இந்துத்தானி C) கன்னடம் D) உருது

8. 'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய' - இத்தொடரில் உள்ள "துகிர்" என்பதன் பொருளை தேர்ந்தெடுக்க.

A) மாணிக்கம் B) மரகதம் C) இரத்தினம் D) பவளம்

9. "தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த" இந்த வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

A) பெருங்கதை B) சீவகசிந்தாமணி C) பதிற்றுப்பத்து D) பரிபாடல்

10. உத்தக சோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர்

A) கம்பர் B) சேக்கிழார் C) புகழேந்தி D) ஒட்டக்கூத்தர்

11. 'புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'

இவ்வடிகளில் இடம்பெறும் பறவையினை தேர்ந்தெடுக்க.

A) காகம் B) கிளி C) புறா D) ஆந்தை

12. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்" - என்னும் புணர்ச்சி விதிப்படி புணர்ந்துள்ள சொல் எது?

A) கற்றா B) கன்றா C) கறா D) கன்று

13. "விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து

உள்நின்று உடற்றும் பசி"

இக்குறட்பாவில் காணலாகும் மோனை எது?

A) மேற்கதுவாய் மோனை B) கீழ்க்கதுவாய் மோனை

C) கூழை மோனை D) ஒரூஉ மோனை

14. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

A) சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது

B) வினைத்தொகையில் வல்லினம் மிகாது

C) வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்

D) உவமைத் தொகையில் வல்லினம் மிகாது

15. தொகை நிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி நின்று பொருள் தருவது எது என தேர்ந்தெடு

A) பண்புத்தொகை **B) அன்மொழித்தொகை**

C) வினைத்தொகை D) உவமைத்தொகை

16. கீழ்க்கண்டவற்றுள் தேவநேயப் பாவாணரின் சிறப்புகளில் பொருந்தாததை தேர்ந்தெடு

A) செந்தமிழ் ஞாயிறு B) செந்தமிழ்ச் செல்வர்

**C) இலக்கியச் செம்மல்** D) தமிழ்ப்பெருங்காவலர்

17. 'உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு' என்னும் நூலை எழுதியவர் யார்?

A) இபான் B) எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை

**C) தால் சுதாய்** D) முனைவர் எமினோ

18. பொருத்துக.

a) பெருஞ்சித்திரனார் 1. காவியப்பாவை

b) சுரதா 2. குறிஞ்சித்திட்டு

c) முடியரசன் 3. கனிச்சாறு

d) பாரதிதாசன் 4. தேன்மழை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 2 | 3 | 4 | 1 |
| **B** | **3** | **4** | **1** | **2** |
| C | 2 | 4 | 1 | 3 |
| D | 4 | 3 | 2 | 1 |

19. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகளுள் இல்லாத ஒன்று எது?

A) கொய்யாக்கனி B) கனிச்சாறு

**C) கல்லக்குடி மாகாவியம்** D) நூறாசிரியம்

20. திருவள்ளுவமாலையில் திருக்குறளைப் புகழ்ந்து பாடியுள்ள புலவர்கள் எத்தனைப் பேர்?

**A) ஐம்பத்து மூவர்** B) எழுபத்தைவர் C) அறுபதின்மர் D) நூற்றுவர்

21. '________' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப் பாம்பின் விடத்தை அப்பர் போக்கியருளினார்

A) உலகெலாம் **B) ஒன்றுகொலாம்**

C) உலகம் யாவையும் D) திருமறையோர்

22. பொருத்துக.

நூல் நூலாசிரியர்

a) களவழி நாற்பது 1. முன்றுறையரையனார்

b) கைந்நிலை 2. பொய்கையார்

c) கார் நாற்பது 3. புல்லங்காடனார்

d) பழமொழி 4. கண்ணங்கூத்தனார்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 2 | 3 | 4 | 1 |
| B | 1 | 2 | 3 | 4 |
| C | 4 | 3 | 1 | 2 |
| D | 3 | 1 | 2 | 4 |

23. 'அறுமோ, நரி நக்கிற்று என்று கடல்'? - இது பயின்று வந்த நூல் எது?

A) பழமொழி B) நாலடியார் C) திருக்குறள் D) ஆசாரக் கோவை

24. "அண்ணம் நுனிநா வருட" எவ்வெழுத்துகள் தோன்றும்?

A) ரழ வரும் B) தந வரும் C) றன வரும் D) யத் தோன்றும்

25. லை முன்னும் ணள முன்னும் தநக்கள் புணரும் விதிப்படி பின்வருவனவற்றுள் எது சரி?

A) னல முன் டணவும் ணள முன் றனவும் B) னல முன் றடவும் ணள முன் ணணவும்

C) னல முன் றனவும் ணளமுன் டணவும் D) னல முன் றணவும் ணளமுன் டனவும்

26. "வித்தொடு சென்ற வட்டி"

என்னும் நற்றிணை வரியில் குறிப்பிடப்படும் வட்டி என்பதன் பொருள் என்ன?

A) பனையோலைப் பெட்டி B) வயல்

C) வட்டி வடிவு D) எல்லை

27. எந்த நாட்டின் அணுதுளைக்காத சுரங்கப் பாதுகாப்பு பெட்டகத்தில் திருக்குறள் உள்ளது

A) இங்கிலாந்து B) சிங்கப்பூர் C) உருசியா D) இந்தியா

28. மறைமலையடிகள் எழுதிய நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்

A) மதங்க சூளாமணி B) மத்தவிலாசம் C) சாகுந்தலம் D) மனோன்மணீயம்

29. "உழவர் ஏரடிக்கும் சிறு கோலே அரசரது செங்கோலை நடத்தும் கோல்" எனக் கூறியவர்

A) பாரதியார் B) பாரதிதாசன் C) வில்லிப்புத்தூரார் D) கம்பர்

30. "சூலியல் வின்சோன்" பாராட்டிய தமிழறிஞர்

A) திரு.வி.க B) மறைமலையடிகள் C) உ.வே.சா D) கவிமணி

31. "அறவுரைக் கோவை" என அழைக்கப் பெறும் நூல்

A) முதுமொழிக்காஞ்சி B) ஆசாரக் கோவை

C) ஏலாதி D) சிறுபஞ்சமூலம்

32. இங்கிலாந்து மகாராணி விக்டோரியா காலையில் கண் விழித்ததும் முதலில் படித்த நூல்

A) திருவருட்பா B) திருக்குறள் C) மகாபாரதம் D) இராமாயணம்

33. குடிமக்கள் வரலாறே ஆதி காப்பியமாகத் தமிழ்நாட்டில் அமைந்து விளங்குகிறது. அப்படி அமைவது எந்த நூல்?

A) சீவகசிந்தாமணி B) சிலப்பதிகாரம் C) மணிமேகலை D) கம்பராமாயணம்

34. எட்டுத்தொகை நூல்களில் 'நாடகப் பாங்கில்' அமைந்துள்ள நூலினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

A) குறுந்தொகை B) அகநானூறு C) கலித்தொகை D) ஐங்குறுநூறு



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



35. பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரே ஒரு நூலாசிரியர் மட்டும் இருநூல் படைத்துள்ளார். அவர் யார்?
A) கபிலர் B) மூவாதியார் C) நல்லாதனார் **D) கணிமேதாவியார்**

36. "என்காற் சிலம்பு மணியுடை அரியே"
இவ்வடிகளில் 'மணி' என்பது எதனைக் குறிக்கும் என்பதைத் தெரிவு செய்க.
A) பவளம் B) முத்து **C) மாணிக்கம்** D) மரகதம்

37. உம்மைத்தொகையில் 'உம்' என்னும் இடைச்சொல் எவ்வாறு மறைந்து வரும் என்பதை தேர்ந்தெடு
A) முதலில் வரும் B) இடையில் வரும்
**C) இடையிலும் இறுதியிலும் வரும்** D) இறுதியில் வரும்

38. ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படு பொருளாக வேறுபடுத்துவது எவ்வகை வேற்றுமை எனத் தேர்ந்தெடு
A) மூன்றாம் வேற்றுமை B) ஐந்தாம் வேற்றுமை
C) ஆறாம் வேற்றுமை **D) இரண்டாம் வேற்றுமை**

39. பின்வருவனவற்றுள் எது உருவகமன்று?
A) மொழியமுது B) அடிமலர் C) தமிழ்த்தேன் **D) கயற்கண்**

40. 'தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்' இக்குறள்காலில் இடம்பெற்றுள்ள சீர்மோனை பெயரினைத் தேர்ந்தெடு
A) கீழ்க்கதுவாய் மோனை **B) கூழை மோனை**
C) ஒரூஉ மோனை D) மேற்கதுவாய் மோனை

41. ஜவஹர்லால் நேர சிறை வைக்கப்பட்டிருந்த அல்மோரா சிறைச்சாலை எந்த மாநிலத்திலுள்ளது என்பதை தெரிவு செய்க
A) மேற்கு வங்காளம் B) குஜராத் **C) உத்தராஞ்சல்** D) உத்தரபிரதேசம்

42. கண்ணதாசன் படைத்த நாடகம்
A) மாங்கனி B) ஆட்டனத்தி ஆதிமந்தி
C) கல்லக்குடி மகா காவியம் **D) இராசதண்டனை**

43. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு அயற்கூற்றில் வருவன
A) மேற்கோள்குறிகள் வராது
**B) தன்மை, முன்னிலைப் பெயர்கள் படர்க்கைப் பெயர்களாக மாறாது**
C) அது, அவை - அங்கே என மாறும்
D) காலப் பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும்

44. "புத்தகம் வாசிப்பதனை கடமையாக ஆக்குதல் கூடாது; கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படி செய்தால், புத்தகம் வாசிப்பு மகிழ்ச்சியைத் தராது" என்று கூறியவரை தேர்ந்தெடு
A) டாக்டர். மு. வரதராசனார் B) பேரறிஞர். அண்ணா
**C) நேரு** D) காந்தி



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

45. 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' - என்ற பாடலடி இடம்பெற்றுள்ள நூல்

A) ஆத்திச்சூடி B) நாலடியார் **C) புறநானூறு** D) பழமொழி நானூறு

46. 'போரை ஒழிமின்' - என்ற கோவூர் கிழாரின் அறிவுரையைக் கேட்டு போரை நிறுத்திய மன்னன் யார்?

**A) நெடுங்கிள்ளி** B) நலங்கிள்ளி

C) அதியமான் D) சேரமான் நெடுமான் அஞ்சி

47. பெருவெடிப்புக் கொள்கையின்படி இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதைக் கூறும் பாடல் இடம்பெறும் நூல்

A) தேவாரம் **B) திருவாசகம்** C) புறநானூறு D) பதிற்றுப்பத்து

48. 'தேம்பாவணி' என்பது

**A) கிறித்தவக் காப்பியம்** B) இசுலாமியக் காப்பியம்

C) வைணவக் காப்பியம் D) சைவக் காப்பியம்

49. "தண்டமிழ் ஆசான்" என்று பாராட்டப் பெற்றவர்

A) இளங்கோவடிகள் B) கம்பர் C) திருவள்ளுவர் **D) சீத்தலைச்சாத்தனார்**

50. நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர் என்னும் தொடரில் 'ஐவர்' என்பதன் இலக்கணம் யாது?

**A) ஒன்றொழி பொதுச் சொல்** B) இனங்குறித்தல்

C) தொடர்மொழி D) பொதுமொழி

51. "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"
இக்குறட்பாவில் பயின்று வரும் அணி யாது?

**A) வேற்றுமையணி** B) இல்பொருள் உவமையணி

C) ஏகதேச உருவக அணி D) எடுத்துக்காட்டு உவமையணி

52. "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்"
இக்குறட்பாவில் உள்ள உவமையின் பொருளை தேர்ந்தெடு

A) நிலம் - வாழ்க்கை

**B) ஊன்றுகோல் - பெரியோர் சொல்**

C) ஊன்றுகோல் - நிலம்

D) ஒழுக்கம் - வாய்ச்சொல்

53. "பட்டியுள காளை படிபால் கறக்குமே நல்ல பசு வேளை தவிரா துழும்"
இப்பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள பொருள்கோள் வகையினை தேர்ந்தெடு

A) அடிமறிமாற்றுப் பொருள்கோள் **B) கொண்டு கூட்டுப் பொருள்கோள்**

C) மொழிமாற்றுப் பொருள்கோள் D) விற்பூட்டுப் பொருள்கோள்

54. தொண்டு செய்து பழுத்தபழம் என்று பாரதிதாசன் போற்றுவது

A) பாரதியார் **B) தந்தை பெரியார்** C) காந்தியார் D) அண்ணாதுரையார்

55. பாரதியார் யாருடைய சாயலில் வசனகவிதை எழுதிட தொடங்கினார்?

A) ஜார்ஜ் எல். ஹார்ட் **B) வால்ட்விட்மன்** C) லிண்ட் ஹோம் D) ஹால் சிப்மேன்

56. நாமக்கல் கவிஞரின் படைப்புகளில் எண்ணிக்கையை பொருத்துக.

a) இசை நாவல்கள் 1. நான்கு

b) புதினங்கள் 2. பத்து

c) கவிதைத் தொகுப்புகள் 3. மூன்று

d) மொழி பெயர்ப்புகள் 4. ஐந்து

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 4 | 3 | 1 | 2 |
| **B** | **3** | **4** | **2** | **1** |
| C | 2 | 4 | 1 | 3 |
| D | 3 | 1 | 4 | 2 |

57. திருப்பனந்தாளிலும், காசியிலும் தம் பெயரால் மடம் நிறுவி உள்ளவர்

A) இராமலிங்க அடிகளார் B) தாயுமானவர்

**C) குமரகுருபரர்** D) வில்லிபுத்தூரார்

58. மயிலேறும் பெருமாளிடம் கல்வி கற்றவர்

**A) சுவாமிநாத தேசிகர்** B) வீரமாமுனிவர் C) சி. இலக்குவனார் D) மீனாட்சி சுந்தரனார்

59. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்

திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"

இத்திருமந்திரப்பாடல் இடம் பெற்ற தந்திரம் எது?

A) ஆறாம தந்திரம் B) இரண்டாம் தந்திரம் **C) மூன்றாம் தந்திரம்** D) எட்டாம் தந்திரம்

60. 'அங்கவியல்' திருக்குறளில் எந்தப் பகுப்பில் இடம்பெற்றுள்ளது?

A) அறத்துப் பால் **B) பொருட் பால்** C) காமத்துப் பால் D) எதுவுமில்லை

61. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து

இக்குறளில் ஏமாப்பு என்பதன் பொருள் யாது?

A) பெருமை B) ஏமாற்றம் **C) பாதுகாப்பு** D) பொறுமை

62. பிழையற்ற வாக்கியம் எது?

A) ஓர் மாவட்த்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்

B) ஒரு மாவடத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்

**C) ஒரு மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்**

D) ஓர் மாவடத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார்

63. 'எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர்' எவ்வகைத் தொடர் என்று தேர்ந்தெடு

A) செயப்பாட்டு வினைத் தொடர் B) கட்டளைத் தொடர்

C) அயற்கூற்றுத் தொடர் **D) செய்வினைத் தொடர்**

64. பொருத்துக.

a) என்றல் 1. முற்றும்மை

b) நுந்தை 2. குறிப்பு வினைமுற்று

c) யாவையும் 3. மரூஉ

d) நன்று 4. தொழிற்பெயர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A** | **4** | **3** | **1** | **2** |
| B | 3 | 4 | 2 | 1 |
| C | 2 | 4 | 1 | 3 |
| D | 4 | 3 | 2 | 1 |

65. "உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்து விட்டாலும் திருக்குறளும் கம்பன் காவியமும் இருந்தால் போதும் மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம்" என்று கூறியவர் யார்?

A) ஜி.யு. போப் **B) கால்டுவெல்** C) பாரதிதாசன் D) பாரதியார்

66. நாடகம் படைத்தல், நடித்தல், நாடக இலக்கணம் இயற்றல் ஆகிய முக்கோணங்களிலும் நாடகத் தொண்டாற்றியவர் யார்?

A) தவத்திரு. சங்கரதாஸ் **B) பரிதிமாற் கலைஞர்**

C) பம்மல் சம்பந்தனார் D) தீண்டிவனம் ராமசாமிராஜா

67. கீழ்க்கண்டவற்றுள் பறவைகள் சரணாலயம் இல்லாத இடத்தைத் தேர்ந்தெடு

A) கரைவெட்டி **B) கோவன்புத்தூர்** C) வெள்ளோடு D) சித்திரங்குடி

68. தருமிக்கு பொற்கிழி அளித்த படலம் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது

A) மதுரைக் காண்டம் B) சுந்தர காண்டம்

**C) திருவாலவாய்க் காண்டம்** D) கூடற் காண்டம்

69. 'அஷ்டப்பிரபந்தம்' கீழ்க்கண்டவற்றுள் எதனைக் குறிக்கும்?

**A) எட்டு சிற்றிலக்கியங்கள்** B) எட்டு பெருங்காப்பியங்கள்

C) ஆறு நூல்கள் D) ஒன்பது உரைகள்

70. காந்திபுராணத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

A) ஓராயிரத்து முப்பத்து நான்கு **B) ஈராயிரத்து முப்பத்து நான்கு**

C) மூவாயிரத்து முப்பத்து நான்கு D) நான்காயிரத்து முப்பத்து நான்க

71. "நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்பு மினது தான்"
- என்ற வரிகள் இடம் பெற்ற நூல் எது?

A) அகநானூறு **B) புறநானூறு** C) திருக்குறள் D) ஐங்குறுநூறு

72. மறைமலையடிகளாரின் மகள்

A) கமலாம்பிகை அம்மையார்　　B) கெசவல்லி அம்மையார்

<u>**C) நீலாம்பிகை அம்மையார்**</u>　　D) ஞானாம்பிகை அம்மையார்

73. நான்காம் வேற்றுமை சொல்லுருபுகள் எவை?

A) கொண்டு, உடன்　　<u>**B) பொருட்டு, நிமித்தம்**</u>

C) இருந்து, நின்று　　D) உடைய

74. பாஞ்சாலி சபதம் இலக்கியத்தில் 'குளிர்காவுஞ்' இதில் இடம்பெற்றுள்ள 'கா' என்பதன் பொருளைத் தேர்ந்தெடுக்க.

A) சோலை　B) பாலைவனம்　C) வயல்　<u>**D) காடு**</u>

75. "நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே" என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) தொல்காப்பியம்　　<u>**B) நன்னூல்**</u>

C) யாப்பருங்கலக் காரிகை　　D) அகத்தியம்

76. ஆதிச்ச நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் எந்த காலகட்டத்தைச் சார்ந்தவை?

A) கி.மு. 200 முதல் கி.பி. 200 வரை　　<u>**B) கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை**</u>

C) கி.மு. 400 முதல் கி.பி 400 வரை　　D) கி.மு. 200 முதல் கி.பி. 300 வரை

77. கீழே கொடுக்கப்பட்டுள்ளவனவற்றுள் பொருத்தமான இணையைத் தேர்வு செய்க.

<u>**A) தினங்களை கொண்டாடுவதை விடுங்கள் - கவிக்கோ**</u>

B) மண்புழுவல்ல மானிடனே - பாரதி

C) கன்று குரல் கேட்ட பசு - தாராபாரதி

D) தண்ணீர் போல் பணத்தை செலவு செய்தல் - ஆலந்தூரார்

78. புதிய பட வீழ்த்திகள் உருவாக <u>இவருடைய</u> கருத்துகளே அடிப்படையாக அமைந்தன

A) எட்வர்டு மைபிரிட்சு　　B) ஈஸ்ட்மன்

C) தாமஸ் ஆல்வா எடிசன்　　<u>**D) பிரான்சிஸ் சென்கின்சு**</u>

79. "அளவில்சனம் செலவாழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேளில் பரிவகற்றி"
- இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் யாது?

<u>**A) பெரியபுராணம்**</u>　　B) திருவிளையாடற்புராணம்

C) சிலப்பதிகாரம்　　D) சீறாப்புராணம்

80. '<u>அரிசி</u>' என்னும் தமிழ்ச் சொல் '<u>ஒரைஸா</u>' என எம்மொழிக்குச் சென்றது?

<u>**A) கிரேக்கம்**</u>　B) இலத்தீன்　C) போர்ச்சுகீசியம்　D) வடமொழி

81. பேரறிஞர் அண்ணாவிற்கு விருப்பமான இலக்கியம்

<u>**A) கலிங்கத்துப்பரணி**</u>　B) திருக்குறள்　C) கம்பராமாயணம்　D) பரிபாடல்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



82. "தமிழ் மொழி அழகான சித்திரவேலைப்பாடமைந்த் வெள்ளித் தட்டு" என்று கூறியவர்

A) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை B) ஜி.யு. போப்

**C) டாக்டர். கிரௌல்** D) கால்டுவெல்

83. மன்னிப்பு - எம்மொழிச் சொல்

A) தமிழ் B) தெலுங்கு C) மலையாளம் **D) உருது**

84. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார்

- இக்குறளில் பயின்று வரும் அணியை எழுதுக?

A) உவமையணி B) நிரல்நிறை அணி

C) வேற்றுப் பொருள் வைப்பு அணி **D) ஏகதேச உருவக அணி**

85. 'முட்டையிட்டது சேவலா, பெட்டையா'?

A) திணைவழு B) விடைவழு C) மரபுவழு **D) வினாவழு**

86. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிதல்: மாணிக்கம், முத்து, பவளம், கிளிஞ்சல்

**A) மாணிக்கம்** B) முத்து C) பவளம் D) கிளிஞ்சல்

87. சொல்லைப் பொருளோடு பொருத்துக.

| சொல் | பொருள் |
|---|---|
| a) வனப்பு | 1. காடு |
| b) அடவி | 2. பக்கம் |
| c) மருங்கு | 3. இனிமை |
| d) மதுரம் | 4. அழகு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 2 | 1 | 4 | 3 |
| B | 3 | 2 | 1 | 4 |
| **C** | **4** | **1** | **2** | **3** |
| D | 1 | 2 | 3 | 4 |

88. பரிதிமாற்கலைஞருக்கு "திராவிட சாஸ்திரி" என்னும் பட்டத்தை வழங்கியவர்

A) மு.சி. பூர்ணலிங்கம் **B) சி.வை. தாமோதரனார்**

C) மறைமலையடிகள் D) திரு.வி. கலியாண சுந்தரனார்

89. 'எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி' என ஓவியச் சிறப்பைப் பழந்தமிழர் அறிந்திருந்ததைக் காட்டும் இவ்வடி இடம் பெற்ற நூல்

A) குற்றாலக் குறவஞ்சி B) முல்லைப் பாட்டு

**C) மதுரைக் காஞ்சி** D) திருமுருகாற்றுப்படை

90. 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' - என் அழைக்கப்படும் நகரம்

A) திருநெல்வேலி B) தஞ்சை C) திருச்சி **D) மதுரை**



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

91. பெரியாரின் வாழ்க்கை நிகழ்வுகளில் சரியானவற்றைப் பொருத்துக

a) யுனெஸ்கோ விருது — 1. 21,400

b) அஞ்சல் தலை — 2. 10,700

c) பங்கேற்ற கூட்டங்கள் — 3. 1970

d) உரையாற்றிய மணிநேரம் — 4. 1978

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 4 | 3 | 1 | 2 |
| **B** | **3** | **4** | **2** | **1** |
| C | 2 | 3 | 4 | 1 |
| D | 1 | 3 | 4 | 2 |

92. திருவிளையாடற் புராணத்தில் உள்ள காண்டங்களில் பொருந்தாத காண்டத்தின் பெயரினைத் தேர்ந்தெடு

A) மதுரைக் காண்டம் B) கூடற் காண்டம்

**C) வஞ்சிக் காண்டம்** D) திருவாலவாய்க் காண்டம்

93. "நரை முடித்துச் சொல்லால் முறை செய்தான்" இத்தொடரில் குறிப்பிடப்படுகின்ற அரசன் யார் என்று தேர்ந்தெடு

A) முதலாம் குலோத்துங்கள் B) இராசராசன்

**C) கரிகாலன்** D) பராந்தகன்

94. 'மணிமேகலை' – அமுதசுரபியைப் பெற்றிட உதவியர்

A) மணிமேகலா தெய்வம் B) சுதமதி

**C) தீவதிலகை** D) அறவண அடிகள்

95. "சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே" - இப்பாடல் வரிகளைப் பாடியவர் யார்?

A) முன்றுரை அரையனார் B) காரியாசான்

**C) மிளைகிழான் நல்வேட்டனார்** D) கணிமேதாவியார்

96. தமிழெண்களைக் கூட்டுக:

ருஅ+சுஅ = ?

A) சுகஉ B) கசுஉ C) கருக **D) கஉக**

97. ஆற்றீர் - பகுபத உறுப்பிலக்கணத்தின் படி எவ்வாறு பிரியும்?

A) ஆற்று + ஈர் B) ஆறு + ஈர்

C) ஆ + இற்று + ஈர் **D) ஆற்று + ஆ + ஈர்**

98. தமிழ் ________ ஓசை மொழி

A) செப்பல் B) தூங்கல் **C) மெல்** D) துள்ளல்

99. "சான்றாண்மை" - அசை பிரித்துக் காட்டுதலில் சரியான விடையைத் தேர்ந்தெடு

A) சா + ன்றா + ண்மை **B) சான் + றாண் + மை**

C) சான் + றா + ண்மை D) சான் + றாண்மை

100. புறத்திணைகள் ________ வகைப்படும்

**A) பன்னிரெண்டு** B) ஏழு C) ஐந்து D) ஒன்பது

101. 2017 அக்டோபர் 4 முதல், 2017 அக்டோபர் 10 வரையில் கொண்டாடப்பட்ட உலகச் சிறப்பு வாரத்தினது கருப்பொருள்

**A) விண்வெளியில் புது உலகத்தினை தேடல்**

B) நலமுடைமைக்கான யோகா

C) உள்ளடங்கிய வளர்ச்சிக்கான நீர் மற்றும் ஆற்றல்

D) அமைதி, முன்னேற்றம் மற்றும் செழுமை

102. 2017-ம் ஆண்டு, குறஹாட்டியில் நடைபெற்ற உலக இளையோர் பெண்கள் குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டவர்களுள் மிகச் சிறந்த வீரர் என பாராட்டப்பட்டவர்

A) நபின் சந்திரா B) சர்ஜுபாலா தேவி C) மினு பாசுமலரி **D) அங்குசிட்டா போரோ**

103. செப்டம்பர் 2017-ல் இந்தியாவின் முதல் UNESCO பாரம்பரிய சான்றிதழ் பெற்ற நகரம் எது?

A) பூரி B) காஞ்சிபுரம் C) அவுரங்காபாத் **D) அகமதாபாத்**

104. இந்தியாவின் 46-வது கிராண்ட் மாஸ்டர் செஸ் விளையாட்டு சாம்பியன் 2017 யார்?

A) ஸ்ரீநாத் நரேன் **B) ஸ்ரீநாத் நாராயணன்** C) ஸ்ரீநாத் வேணு D) ஸ்ரீநாத் ஸ்ரீநிவாசன்

105. 0.12, 0.012, 0.0012..... என்ற தொடர் வரிசையில் 7-வது உறுப்பு

A) $1.2\times10^{6}$ B) $1.2\times10^{-6}$ C) $1.2\times10^{7}$ **D) $1.2\times10^{-7}$**

106. சுருக்குக.

9/8÷3/5 -இல் (3/4+3/5)

A) 1 11/18 B) 1 5/18 C) 1 13/18 **D) 1 7/18**

107. ஒரு குறிப்பிட்ட அசலானது ஆண்டுக்கு 8% வட்டி வீதத்தில் மூன்று மடங்காகுவதற்கு பிடிக்கும் காலம்

A) 20 ஆண்டுகள் B) 22 ஆண்டுகள் **C) 25 ஆண்டுகள்** D) 30 ஆண்டுகள்

108. எந்த மாநில அரசு க்யான்கங்குஞ் மின்- வர்க்க திட்டத்தினை செயல்படுத்தியது?

A) ஆந்திர பிரதேஷ் B) டெல்லி C) கேரளா **D) குஜராத்**

109. நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை ஒன்றிய அமைச்சகம் 2017-நவம்பர்-28 அன்று ICMR உடன் இணைந்து IHMI-யினை துவக்கியுள்ளது. IHMI என்பது எதைக் குறிக்கும்?

**A) இந்திய அதிக இரத்த அழுத்தம் மேலாண்மை தொடக்கம்**

B) இந்திய தேகநிலை மற்றும் நல மேலாண்மை தொடக்கம்

C) இந்தியனின் இதய மற்றும் மூளை நல அறிவு

D) இந்திய தேகநிலை ஆரோக்கியம் மற்றும் பராமரித்தல் தொடக்கம்

110. வரிசை I உடன் வரிசை II-னை பொருத்துக.
முக்கிய வெள்ளச் சீர்குலைவு

| வரிசை I | வரிசை II |
|---|---|
| a) சைனா | 1. செயின்ட் பிரான்ஸிஸ் |
| b) பென்சில்வேனியா | 2. அஸ்ஸாம் |
| c) லாஸ் ஏஞ்சல்ஸ் | 3. ஹாவாங் ஹோ |
| d) இந்தியா | 4. ஜோன்ஸ்டான் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 4 | 1 | 2 | 3 |
| **B** | **3** | **4** | **1** | **2** |
| C | 2 | 1 | 3 | 4 |
| D | 3 | 1 | 2 | 4 |

111. கீழ்வருபனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க.

| | |
|---|---|
| a) பானிபட் | 1. கி.பி. 1527 |
| b) காக்ரா | 2. கி.பி. 1528 |
| c) கான்வா | 3. கி.பி. 1529 |
| d) சந்தேரி | 4. கி.பி. 1526 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 1 | 2 | 4 | 3 |
| **B** | **4** | **3** | **1** | **2** |
| C | 3 | 4 | 2 | 1 |
| D | 2 | 1 | 3 | 4 |

112. வேளாண்மை உற்பத்தியை அளவிடும் முறை

A) உரத்தின் நுகர்வளவு மற்றும் உழைப்பு உற்பத்தி திறன்

B) நீர்ப்பாசன வசதி

**C) நிலம் மற்றும் உழைப்பின் உற்பத்தித்திறன்**

D) எந்திரமயமாதல்

113. தவறான ஜோடியை கண்டறிக.

I) சலவை சோடா - $Na_2CO_3$

II) கலவைத் தூள் - CaO

III) பாரீஸ் சாந்து - $CaSO_4.1/2H_2O$

IV) சமையல் சோடா - $NaHCO_3$

A) I **B) II** C) III D) IV

114. சமீபத்தில் நடைபெற்ற இந்திய மாலத்தீவு பரஸ்பர கூட்டு இராணுவ பயிற்சி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) இம்பாக்ஸ் 2017 **B) எக்குவரின் 2017** C) இந்திரா 2017 D) சம்ப்ரீத் 2017

www.Padasalai.Net www.TrbTnpsc.com



115. செப்டம்பர் 2017-க்குள் இந்தியா, 5G-க்கு, நிலைமாற்றம் ஏற்படுத்திக் கொள்ளும் அளவிலான வலுவான 'பாக்ஹவுலை' (Backhaul) பெற்றிருக்வில்லை. பாக்ஹவுல் என்பது இதற்கானதொரு இணைய வலை வகை

A) தரவு பகுப்பாய்விற்குண்டான வாயில்

B) மைய மாற்று நிலையத்தோடு கைப்பேசியின் தங்கு நிலையினை இணைக்கும் வலை

**C) கம்பியில்லா தரவு செலுத்துகைக்கான பிணைப்பி**

D) கைப்பேசி நுகர்வோருக்கான நெடுக்கங்காட்டி

116. தாவர உலகில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் சிற்றினங்கள் கொண்ட தாவர தொகுதி எது?

A) பூஞ்சைகள் B) டெரிடோபைட்டா

C) பிரையோஃபைட்டுகள் **D) ஜிம்னோஸ்பெர்ம்கள்**

117. எந்த வகுப்பு ஆல்காக்கள் டைனமைட்டு உற்பத்தி செய்வதில் பயன்படுகின்றன?

A) குளோரோபைசி **B) கிரைசோபைசி** C) கிரிப்டோபைசி D) ஃபேயோபைசி

118. வேதி பிற சார்பு உயிரிக்கு எடுத்துக்காட்டு எது?

A) மனிதன் B) விஸ்கம்

**C) நைட்ரசோமோனாஸ்** D) பெக்யாடோவா

119. a,b.c என்பன ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன எனில் $3^a$, $3^b$, $3^c$ ஆகியவை ______ என்ற தொடர்வரிசையில் உள்ளது.

A) A.P. **B) G.P**

C) A.P. மற்றும் G.P. D) ஏதும் இல்லை

120. -1<r<1 எனில் முடிவிலி வரை பெருக்குத் தொடரின் கூடுதல்

A) $a(r^n-1)/r-1$ B) $a(1-r^n)/1-r$ **C) a/1-r** D) na

121. அரைவட்டத்தில் அமையும் கோணம் _______

A) குறுங்கோணம் B) விரிகோணம் C) நேர்கோணம் **D) செங்கோணம்**

122. குடிசரசுத் துணைத் தலைவர் பதவி பற்றி எந்த அரசியலமைப்பு சட்டப்பிரிவு கூறுகிறது?

A) 53 B) 356 C) 360 **D) 63**

123. கீழ்காணும் வாக்கியங்களை அடிப்படையாக கொண்டு சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து தேர்வு செய்க.

கூற்று (A): பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதை தற்சுழற்சி என்கிறோம்

காரணம் (R): தற்சுழற்சி இயக்கம் காரணமாகத்தான் பருவகாலம் உருவாகிறது

**A) (A) மட்டும் சரி (R) தவறு**

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R), (A) உடைய சரியான விளக்கமாகும்

C) (A) மற்றும் (R) இரண்டும் தவறு

D) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R), (A) உடைய சரியான விளக்கமல்ல



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



124. போபால் அரசியார்களான ஷாஜஹான் பேகமும், சுல்தானா ஜெஹான் பேகமும் இந்த வரலாற்று சின்னத்தை செப்பனிட ஏராளமான பணத்தை வாரி வழங்கினர்

A) சாரநாத் கல்தூண் **B) சாஞ்சி ஸ்தூபி**

C) உமாயூன் கல்லறை D) ஷெர்ஷாவின் நினைவிடம்

125. பரீத்தின் உண்மையான பெயர்

**A) ஷெர்ஷா** B) இப்ராஹிம் லோடி C) சிக்கந்தர் லோடி D) அலாவுதீன்

126. சரியான காரணங்களை தெரிவு செய்க:

பின்வரும் காரணங்களினால் இரு சக்கர வாகனங்களுக்கு, பெட்ரோலுடன் எண்ணெய் கலக்கப்படுகிறது.

(1) இயந்திர பாகங்களை உராய்விலிருந்து பாதுகாக்கும்

(2) இரு இயந்திரங்களுக்கிடையிலான வெப்பத்தை இது வெளியேற்றும்

(3) தீப்பொறிச் செருகில் (plug), இது கரியைப் படிய வைக்கும்

A) (1), (2) மற்றும் (3) **B) (1) மற்றும் (2) மட்டும்**

C) (2) மற்றும் (3) மட்டும் D) (1) மற்றும் (3) மட்டும்

127. 'பனி பாலம் நடவடிக்கை' எந்த அமைப்போடு தொடர்புடையது

A) ISS B) ISRO **C) NASA** D) ESA

128. புது டெல்லியில் 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்திய பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட அமைப்பு

A) அனைத்திந்திய யுனானி மருத்துவ நிறுவனம் B) அனைத்திந்திய சித்த மருத்துவ கழகம்

**C) அனைத்திந்திய ஆயுர்வேத மருத்துவ கழகம்** D) அனைத்திந்திய இயற்கை மருத்துவ கழகம்

129. பொருத்துக.

| | குறைபாட்டு நோய்கள் |
|---|---|
| a) A | 1. பெல்லக்ரா |
| b) $B_1$ | 2. நிக்டலோபியா |
| c) $B_6$ | 3. பெர்னீசியஸ் அனீமியா |
| d) $B_{12}$ | 4. பெரி-பெரி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 2 | 3 | 1 | 4 |
| B | 1 | 4 | 2 | 3 |
| C | 4 | 1 | 3 | 2 |
| **D** | **2** | **4** | **1** | **3** |

130. இரு வெவ்வேறு எண்களின் (G.C.D, மற்றும் L.C.M) சரியான தொடர்பு

I) மீப்பெரு.பொ.வ. = மீச்சிறு.பொ.ம II) மீப்பெரு.பொ.வ. ≤ மீச்சிறு.பொ.ம

III) மீச்சிறு.பொ.ம ≥ மீப்பெரு.பொ.வ. IV) மீச்சிறு.பொ.ம > மீப்பெரு.பொ.வ.

A) I B) II C) III **D) IV**



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

131. p,q,r,s,t என்பன கூட்டுத் தொடர் வரிசையில் (A.P) இருப்பின் p-rq+6r-4s+t = ?

A) 1 B) 2 C) 3 **D) 0**

132. வாக்பதர் எழுதிய நூல்

A) பஞ்ச சித்தாந்திகா **B) அஷ்டாங்க சம்கிருதம்**

C) கிருதார்ச்சுனியம் D) அமரகோஷம்

133. கொரில்லா போர் முறை என்றால்

A) முறையான போர் முறை B) பயிற்சி பெற்ற போர் முறை

**C) முறைசாரா போர் முறை** D) கலப்பு போர் முறை

134. உணவு பொருட்கள் சம்மந்தப்பட்ட உலக தரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்ட கமிஷன் யாது?

**A) கோடாக்ஸ் அலிமென்டேஷன் கமிஷன்**

B) உணவு மற்றும் வேளாண்மைத் துறை கமிஷன்

C) உலக சுகாதார கமிஷன் D) இந்திய தர குழுமம்

135. அளிப்பு நிலையாக இருக்கும் காலம்

A) குறுகிய காலம் **B) மிகக் குறுகிய காலம்**

C) நீண்ட காலம் D) மிக நீண்ட காலம்

136. பழமைப் பொருளியல் அறிஞர்கள் ________ கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தனர்

**A) தடையில்லா வாணிபம்** B) தொழில்துறை

C) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி D) வாணிகம்

137. பொருத்துக.

a) சாரதா திட்டம் 1. 1992

b) சம ஊதிய திட்டம் 2. 1976

c) கரும்பலகை திட்டம் 3. திருமதி. இந்திராகாந்தி

d) 20 அம்ச திட்டம் 4. 1929

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A** | **4** | **2** | **1** | **3** |
| B | 3 | 1 | 2 | 4 |
| C | 2 | 1 | 3 | 4 |
| D | 3 | 4 | 2 | 1 |

138. தீக்குச்சியில் உள்ள வேதிப்பொருட்கள் யாவை?

A) சிவப்பு பாஸ்பரஸ், வச்சிரம், கந்தகம்

**B) ஆண்டிமனி சல்பைடு, கந்தகம், பொட்டாசியம் குளோரேட்**

C) ஆண்டிமனி சல்பைடு, சிவப்பு பாஸ்பரஸ், வச்சிரம்

D) ஆண்டிமனி சல்பைடு, பாஸ்பரஸ், கந்தகம்

139. கீழே கொடுக்கப்பட்டுள்ளவர்களில் பொருந்தாத நபரை தேர்ந்தெடு

A) திரிஷா தேப் **B) நிட்டல் பால்**

C) லில்லி சானு பூனம் D) ஜோதி சுரேகா வென்னம்

140. பட்டியலில் இருக்கும் தமிழ்நாட்டின் எந்த மாநில நெடுஞ்சாலை நவம்பர் 2017-ல் தேசிய நெடுஞ்சாலையாக மேம்படுத்தப்படவில்லை?

A) திருப்பூர் - ஒட்டன்சத்திரம் மாநில நெடுஞ்சாலை

B) சேலம் - திருப்பத்தூர் - வாணியம்பாடி மாநில நெடுஞ்சாலை

C) கோடைகாட் - கொடைக்கானல் மாநில நெடுஞ்சாலை

**D) சென்னை - எண்ணூர் மாநில நெடுஞ்சாலை**

141. நான்காவது "உலகத் தமிழர் பொருளாதார மாநாடு" எங்கு நடைபெற்றது?

A) கோவை B) கோலாலம்பூர் C) சிங்கப்பூர் **D) டர்பன்**

142. ஒரு பெருக்குத் தொடர் வரிசையின் அடுத்தடுத்த நான்கு உறுப்புகளின் பெருக்குத் தொகை 625 எனில் முதல் உறுப்பைக் காண்க.

A) 15 B) 25 **C) 5** D) 35

143. இலாப அல்லது நட்ட சதவீதம் எப்பொழுதும் எதன் மேல் கணக்கிடப்படுகிறது?

**A) அடக்க விலை** B) விற்பனை விலை C) இலாபம் D) நட்டம்

144. ஒரு மாணவன் அவனுடைய பள்ளிக்கு செல்லும் போது மணிக்கு 3 கி.மீ வேகத்திலும் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது மணிக்கு 2 கி.மீ வேகத்திலும் செல்கிறார் . மேலும் அவர் பள்ளிக்கு சென்று வர 5 மணி நேரம் எடுத்துக் கொண்டால் பள்ளிக்கும் வீட்டிற்கும் உள்ள தூரம்

A) 5 கி.மீ B) 5.5 கி.மீ **C) 6 கி.மீ** D) 6.5 கி.மீ

145. a/3=b/4=c/7 எனில் a+b+c/c என்பது

A) 7 **B) 2** C) 1/2 D) 1/7

146. 2:3, 3:5, 4:7, 5:8 இவற்றில் பெரியது எது?

A) 3:5 B) 4:7 C) 5:8 **D) 2:3**

147. இந்தியாவில் தனக்கென்று சின்னத்தை பெற்ற முதல் நகரம் எது?

A) பூனா **B) பெங்களூரு** C) சென்னை D) டெல்லி

148. உலக காடுகள் தினம் கொண்டாடப்படும் நாள் எது?

A) மார்ச் 8 **B) மார்ச் 21** C) மார்ச் 22 D) மார்ச் 23

149. தொழில் முனைவு முன்னேற்றத்துக்கான திட்டம் (EDP) தொடர்புடையது

A) எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான திட்டம்

B) பெண்களின் ஆற்றலை நிரூபணம் செய்ய உதவும் திட்டம்

**C) பெண்களின் தனித்திறமைகளை வெளிக்கொணர்தல்**

D) வறுமையை ஒழிப்பதற்கான திட்டம்

150. பொருத்துக.

| | |
|---|---|
| a) ஜவஹர் கிராம் வேலைவாய்ப்புத் திட்டம் | 1. 1993 |
| b) நாட்டு சமூக உதவித் திட்டம் | 2. 1977 |
| c) வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் | 3. 1995 |
| d) கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் | 4. 1999 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 3 | 2 | 1 | 4 |
| **B** | **4** | **3** | **1** | **2** |
| C | 4 | 2 | 1 | 3 |
| D | 3 | 1 | 2 | 4 |

151. அறிவியல் சமதர்மத்தை தோற்றுவித்தவர்

A) ஆல்பிரட் மார்ஷல் **B) கார்ல் மார்க்ஸ்** C) J.A. சும்பீட்டர் D) J.M. கீன்சு

152. சரியாகப் பொருத்துக.

| | |
|---|---|
| a) ஆஸ்மியம் | 1. சிறந்த மின்கடத்தி |
| b) லித்தியம் | 2. மிகக் கனமான உலோகம் |
| c) டங்ஸ்டன் | 3. மிக இலேசான உலோகம் |
| d) சில்வர் | 4. அதிக உருகுநிலை - 3300°C |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 1 | 2 | 3 | 4 |
| B | 2 | 1 | 4 | 3 |
| **C** | **2** | **3** | **4** | **1** |
| D | 3 | 4 | 1 | 2 |

153. 2017 இதற்கான பட்டம் வென்றவரையும், சாம்பியன் ஷிப் பட்டத்தையும் பொருத்துக.

| | |
|---|---|
| a) செல்வி, சாய்கோம் மீராபாய் சானு | 1. உலக இளநிலை (V 20) சதுரங்க சாம்பியன்ஷிப் |
| b) செல்வி. மேரி காம் | 2. உலக பளு தூக்கும் சாம்பியன்ஷிப் |
| c) திரு. கோபி தொனெக்கல் | 3. ஆசிய மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் |
| d) செல்வன் அரவிந்த் சிதம்பரம் | 4. ஆசிய மாராத்தான் சாம்பியன்ஷிப் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 3 | 4 | 2 | 1 |
| **B** | **2** | **3** | **4** | **1** |
| C | 2 | 3 | 1 | 4 |
| D | 3 | 2 | 1 | 4 |

154. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணைகள் யாது?

| | |
|---|---|
| I) குளோரோபுளோரோ கார்பன் | - குளிர்சாதனப் பெட்டி |
| II) மீத்தேன் | - பண்ணை மண்ணை உழுதல் |
| III) நைட்ரஸ் ஆக்ஸைடு | - கால்நடைகளில் செரித்தல் |
| IV) கார்பன் டை ஆக்ஸைடு | - புதை படிவ எரிபொருட்களை எரித்தல் |

A) I மற்றும் II **B) II மற்றும் III** C) III மற்றும் IV D) I மற்றும் IV

155. 90, 150, 225 ஆகிய எண்களின் மீ.பொ.வ மற்றும் மீ.பொ.ம

**A) 15, 450** B) 450, 15 C) 90, 225 D) 225, 150

156. y-1/y =6 எனில் $y^3$-1/$y^3$ இன் மதிப்பைக் காண்க.

A) 216 B) 222 **C) 234** D) 228

157. ஓர் இணைகரத்தில் எது தவறான கூற்று?

A) எதிர்ப் பக்கங்கள் இணையாகும்

B) எதிரெதிர் கோணங்கள் மற்றும் பக்கங்கள் சமமாகும்

**C) மூலை விட்டங்களின் நீளங்களும் சமமாகும்**

D) மூலை விட்டங்கள் ஒன்றையொன்று இரு சமக் கூறிடும்

158. பொருத்துக.

a) ஆளுநர் 1. விதி 171

b) முதலமைச்சர் 2. விதி 170

c) மேலவை 3. விதி 153

d) சட்டசபை 4. விதி 163

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 3 | 2 | 4 | 1 |
| **B** | **3** | **4** | **1** | **2** |
| C | 1 | 4 | 3 | 2 |
| D | 2 | 3 | 1 | 4 |

159. 1948-ம் ஆண்டு மின்பகிர்மான சட்டத்தின்படி தமிழகத்தில் எந்த ஆண்டு மின்சார வாரியம் (TNEB) அமைக்கப்பட்டது?

**A) 1957 ஜுலை 1** B) 1957 ஆகஸ்ட் C) 1957 செப்டம்பர் 1 D) 1957 அக்டோபர் 1

160. பிராகூய் மொழிகளுக்கும், திராவிட மொழிகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை கூறும் கல்வெட்டு

A) வங்காள B) லிசியர் C) காஸ்பியர் **D) தெலுங்கு**

161. பின்வரும் உபகரணங்களில் ஒளி சைகைகளை மின்னியல் (அ) மின்னணு சைகைகளாக மாற்றுபவை

(1) இலக்க ஒளிப்படக் கருவி (2) தொலை நகலி (3) ஒளியியல் பரப்பி

A) (1) மற்றும் (2) மட்டும் B) (2) மற்றும் (3) மட்டும்

C) (1) மற்றும் (3) மட்டும் **D) (1), (2) மற்றும் (3)**

162. கைகள் நீட்டப்பட்ட நிலையில் சுழலும் நாற்காலியின் மீது அமர்ந்திருக்கும் ஒருவர், திடீரென் கைகளை மடக்கும் போது, கோணத் திசைவேகம்

A) குறையும் **B) அதிகமாகும்** C) சுழியாகும் D) மாறாமலிருக்கும்

163. சமீபத்தில் இந்திய.இஸ்ரேல் கூட்டு வேளாண்மை திட்டத்தின் கீழ் மலர் வளர்ப்பு மையம் எங்கு தொடங்கப்பட்டது?

A) தோவாலை, கன்னியாகுமரி மாவட்டம் **B) தளி, கிருஷ்ணகிரி மாவட்டம்**

C) அண்ணாநகர், சென்னை D) குன்னூர், நீலகிரி மாவட்டம்

164. இந்தியாவின் திட்டக் கமிஷன் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) திட்டக் குழு **B) நிதி ஆயோக் (NITI Aayog)**

C) நிதி சஞ்ஜோக் (NITI Sanjog) D) பாரதிய ஆயோக் மண்டல்

165. $x, 2x+2, 3x+3$ என்பன ஒரு பெருக்குத் தொடர் வரிசையிலிருப்பின் $11x$, $22x+22$, $33x+33$ என்ற தொடர் வரிசையானது

A) ஒரு கூட்டுத் தொடர் வரிசை **B) ஒரு பெருக்குத் தொடர் வரிசை**

C) ஒரு மாறிலித் தொடர் வரிசை

D) ஒரு கூட்டுத் தொடர் வரிசையும் அல்ல பெருக்குத் தொடர் வரிசையும் அல்ல

166. மூன்று எண்களின் கூடுதல் 264 முதல் எண் இரண்டாவது எண் போல் இரு மடங்கு, மூன்றாவது எண் முதல் எண்ணில் மூன்றில் ஒரு பங்கு எனில் இரண்டாவது எண் யாது?

A) 48 **B) 72** C) 54 D) 64

167. இந்திய விமானப் படையால் 2017-ம் ஆண்டு டிசம்பர் 17-ம் நாள் அலுவல் ரீதியாக கைவிடப்பட்ட பாதுகாப்பு ஊர்தி

A) P-8 ILR Maritime Reconnaissance Anti Submarine Warfare Aircraft

**B) Mi-S Attack and Utility Helicopter**

C) P-3 Orion Anti Submarine Warfare Aircraft

D) Mi-V5 Medium Lift Reconnaissance Aircraft

168. 2017-ம் ஆண்டு அக்டோபரில் வெளியிடப்பட்ட "Dark horse and other plays" என்ற நாடகத்தை வெளியிட்டவர்

**A) கௌரி ராம்நாராயண்** B) கௌரி லங்கேஷ் C) அருண் கொலாத்கர் D) மகேஷ் தத்தானி

169. சட்ட அலுவலர்கள் மற்றும் மத்திய அரசு தலைமை வழக்குரைஞர்களை எந்த விதியின் கீழ் இந்திய குடியரசு தலைவர் நியமிக்கின்றார்?

A) விதி 66 B) விதி 67 **C) விதி 76** D) விதி 96

170. இந்திய அரசு கல்வி உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய நாள்

A) 15 ஆகஸ்ட் 1947 B) 26 ஜனவரி 1950 **C) 1 ஏப்ரல் 2010** D) 2 அக்டோபர் 2012

171. உரிமை பணிச் சட்டம் (லோக் அதலத்) எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

A) 1985 **B) 1987** C) 1986 D) 1988

172. பொருத்துக.

a) அஸ்ஸாம் 1. பொடு

b) ஆந்திரபிரதேசம் 2. மாசன்

c) மத்தியபிரிதேசம் 3. பொன்னம்

d) கேரளா 4. ஜும்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 3 | 1 | 2 | 4 |
| B | 2 | 3 | 4 | 1 |
| C | 1 | 2 | 3 | 4 |
| D | 4 | 3 | 2 | 1 |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



173. புதிய வேளாண் விலைக் கொள்கை வெளியிடப்பட்ட ஆண்டு

A) 1984 B) 1976 C) 1996 **D) 1986**

174. கல்வி பற்றிய பொருளியலை உருவாக்கியவர்

A) மார்ஷல் B) காரல் மார்க்ஸ் **C) ஸ்கல்ட்ஸ்** D) கீன்சு

175. தேசிய ஒருமைப்பாடு தினம் கொண்டாடும் நாள் எது?

**A) நவம்பர்-19** B) அக்டோபர்-20 C) ஜுன்-10 D) ஆகஸ்டு-12

176. பட்டியல் I-லிருந்து பட்டியல் II-ஐ சரியாகப் பொருத்துக.

| பட்டியல் I (கரைசல்) | பட்டியல் II (pH –மதிப்பு) |
|---|---|
| a) குருதி | 1. 6.5 |
| b) சிறுநீர் | 2. 7.3-7.5 |
| c) வினிகர் | 3. 5.5-7.5 |
| d) பால் | 4. 2.4-3.4 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A** | **2** | **3** | **4** | **1** |
| B | 2 | 4 | 1 | 3 |
| C | 4 | 2 | 3 | 1 |
| D | 3 | 1 | 4 | 2 |

177. 2017-ஆம் ஆண்டிற்கான வியாஸ் சம்மான் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 'துக்கம் சுக்கம்' என்ற நாவலின் ஆசிரியரான இவர், திரு/திருமதி

A) சுரிந்தர் வர்மா B) சுனிதா ஜெயின்

**C) மம்தா காலியா** D) கமல் கிஷோர் கோயன்கா

178. 15-வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

A) ஜனவரி 1, 2018 B) ஏப்ரல் 1, 2018 **C) ஏப்ரல் 1, 2020** D) ஜனவரி 1, 2020

179. காற்றில்லா சுவாசத்தில் குளுக்கோஸின் சுவாச ஈவு ________ ஆகும்.

**A) ஒன்று** B) நான்கு

C) முடிவற்றது D) ஒன்றுக்கு குறைவானது

180. $e^0$ -வின் மதிப்பு

A) e **B) 1** C) 0 D) ∞

181. ஒரு மாறியில் அமைந்த ஓர் ஒருபடிச் சமன்பாட்டிற்கு எத்தனை தீர்வுகள்?

A) மூன்று தீர்வுகள் **B) ஒரு தீர்வு** C) இரண்டு தீர்வுகள் D) தீர்வுகள் இல்லை

182. 0-வின் தலைகீழ் = ________

A) 0 B) 1

C) ∞ **D) தலைகீழி கிடையாது**



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

183. கீழ்காணும் கூற்றுகளில் எது தவறான கூற்றாகும்?

A) வெவ்வேறு எண்களின் பொது வகுத்திகளில் மிகப்பெரிய வகுத்தி அவ்வெண்களின் மீப்பெரு பொது வகுத்தி ஆகும்

**B) இரு எண்களின் மீப்பெரு பொ.வ. 1 எனில் அவ்விரு எண்களும் பகா எண்கள் எனப்படும்**

C) வெவ்வேறு எண்களின் பொது மடங்குகளில் மிகச்சிறிய மடங்கு அவ்வெண்களின் மீச்சிறு பொது மடங்கு ஆகும்

D) இரு எண்களின் பெருக்கற்பலன் அவற்றின் மீப்பெரு பொ.வ. மற்றும் மீச்சிறு பொ.ம. ஆகியவற்றின் பெருக்கற்பலனுக்குச் சமமாகும்.

184. கீழ்கண்டவற்றை பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடு

| தலக் காற்றுகள் | இடங்கள் |
|---|---|
| a) சின்னூக் | 1. மெக்சிகோ வளைகுடா |
| b) ஃபான் | 2. அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| c) மிஸ்ட்ரல் | 3. வடக்கு இத்தாலி |
| d) நார்ட் | 4. ஆல்ப்ஸ் மலை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A** | **2** | **3** | **4** | **1** |
| B | 4 | 3 | 2 | 1 |
| C | 1 | 4 | 2 | 3 |
| D | 4 | 2 | 1 | 3 |

185. ரிக்வேத காலத்தில் அரச குமாரர்களுக்கு கற்பிக்கப்பட்ட போர்க்கலை இவ்வாறு அழைக்கப்பட்டது

A) சாம வேதம் **B) தனுர் வேதம்** C) அதர்வ வேதம் D) வருண வேதம்

186. பொருத்துக.

| வரிசை - I | வரிசை - II |
|---|---|
| a) பொதுபணி தேர்வாணையம் | 1. 1924 |
| b) இந்து அறநிலைய சட்டம் | 2. 1929 |
| c) ஆந்திரா பல்கலைக்கழகம் | 3. 1926 |
| d) பணியாளர் தேர்வு வாரியம் | 4. 1925 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 4 | 3 | 2 | 1 |
| B | 2 | 4 | 1 | 3 |
| C | 4 | 2 | 3 | 1 |
| **D** | **2** | **3** | **4** | **1** |

187. கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது/எவை தவறானது ஆகும்?

(1) ஒளி ஆண்டு என்பது காலத்தின் ஓர் அலகாகும்

(2) வானியல் அலகு (AU) என்பது தொலைவின் ஓர் அலகாகும்

(3) பார்செக் என்பது நிறையின் ஓர் அலகாகும்

A) (2) மற்றும் (3) **B) (1) மற்றும் (3)** C) (3) மட்டும் D) (1) மட்டும்



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



188. உலக சுகாதார நிறுவனத்தின் புதிய துணைப் பொது இயக்குநராக (திட்டம்) (Deputy Director General) நியமிக்கப்பட்டவர்

A) நிஷா தேஷாய் பிஸ்வால் B) தினேஷ்வர் சர்மா

C) **<u>சௌமியா சுவாமிநாதன்</u>** D) கௌதம் பியூபவாலா

189. 2017-ஆம் ஆண்டு இந்திய விசைத்தறி மற்றும் ஜவுளித் துறை, விசைத்தறி மற்றும் சிறுதொழில் நிறுவனங்கள் ஆகியவை மென்மேலும் வளர ஊக்கப்படுத்தப்பட்ட திட்டம்

A) SAMPRADA B) DOST C) AARAKSHAN **<u>D) SAATHI</u>**

190.

1. ஆம்னியான் நீர்ம ஊடகத்தைக் கருவிற்கு கொடுக்கிறது
2. கோரியான் அலண்டாய்ஸ் இணைந்து தாய் சேய் இணைப்பாக மாறுகிறது
3. யோக்சாக் நீர்ம ஊடகத்தைக் கருவிற்கு கொடுக்கிறது

எது சரி?

A) 1, 2 தவறு **<u>B) 1, 2 சரி</u>** C) 2,3 சரி D) 1. 3 சரி

191. $1^2+2^2+3^2+ ....... +10^2 = 385$ எனில் $2^2+4^2+6^2+...... +20^2$ -ன் மதிப்பு

A) 770 B) 1150 **<u>C) 1540</u>** D) 385x385

192. y-ன் x%-க்கும் x-ன் y% இடையே, விகித பின்னத்தின் மதிப்பு

A) 1/xy B) xy C) x/y **<u>D) 1</u>**

193. அருணின் தற்போதைய வயது அவருடைய தந்தையின் வயதில் பாதியாகும். பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு தந்தையின் வயதானது அருணின் வயதைப் போல மும்மடங்காக இருந்தது. தற்போது தந்தையின் வயது

A) 24 ஆண்டுகள் B) 36 ஆண்டுகள் **<u>C) 48 ஆண்டுகள்</u>** D) 50 ஆண்டுகள்

194. தேசிய கொடி பற்றிய தவறான விதியை கண்டுபிடிக்க

A) தேசியக் கொடியை ஏற்றும் போதும் இறக்கும் போதும் கவனமாகச் செயல்பட வேண்டும்

B) சூரியன் மறையும் முன் தேசியக் கொடியை இறக்கி விட வேண்டும்

**<u>C) வேறு எந்த ஒரு கொடியையும் நமது தேசியக் கொடியின் இடது புறமோ அல்லது கொடயை விட உயரமாகவோ பறக்கவிடக்கூடாது</u>**

D) கொடியை கம்பத்தில் ஏற்றும் போது நாம் நேராக நிற்க வேண்டும்

195. இந்தயி அரசியல் சட்ட விதி 41 கூறுவது

**<u>A) வேலைக்கு உரிமை</u>** B) சொத்துக்கு உரிமை

C) வாழ்வுக்கு உரிமை D) சுரண்டலுக்கு எதிரான உரிமை

196. புதுச்சேரியை பிரெஞ்சுக்காரர்களுக்கு வழங்கியவர் யார்?

A) பஹலூல் கான் லோடி B) இப்ராகிம் லோடி

C) ஷேர்கான் லோடி D) இல்துமிஷ்



http://www.trbtnpsc.com/2018/02/tnpsc-group-4-exam-2018-answer-key-download-11.2.2018.html

197. சிவாஜியின் முடிசூட்டு விழா நடைபெற்ற கோட்டை

A) தோர்னா B) ரெய்கார் C) கல்யாண் D) புரந்தர்

198. குதுப்மினார் என்னும் கோபுர கட்டுமானப் பணிகளைத் தொடக்கி வைத்தவர்

A) இல்துமிஷ் B) ஆரம் ஷா C) குத்புதீன் ஐபெக் D) பிரோஸ் ஷா

199. எந்த ஒன்று சங்கத் தமிழின் சமுதாய நிலையை விளக்குகிறது?

A) எட்டுத்தொகை B) பத்துப்பாட்டு

C) தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரம் D) சிலப்பதிகாரம்

200. வரிசை I உடன் வரிசை IIயினைப் பொருத்தி வரிசைகளுக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினை தேர்வு செய்க:

| வரிசை I | வரிசை II |
|---|---|
| a) ஆமுக்தமாலியதா | 1. குல்பர்க்கா |
| b) ஜும்மா மசூதி | 2. பீஜப்பூர் |
| c) கோல்கும்பா | 3. சமஸ்கிருதம் |
| d) ஜாம்பவதி கல்யாணம் | 4. தெலுங்கு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 1 | 2 | 3 | 4 |
| B | 3 | 2 | 4 | 1 |
| C | 4 | 1 | 2 | 3 |
| D | 2 | 4 | 3 | 1 |

TNPSC Group - II, IIA, IV & VAO
TET Paper – I & Paper – II
PG Tamil, English, History & Commerce
தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறும்
இடம் : விடியல் பயிற்சி மையம்,
MTC வளாகம், அம்மா உணவகம் அருகில்,
கொசப்பேட்டை, வேலூர்.
வேலூர் - 9092997509, 8122706441
விடியல் ஷேவ ஜெ ஆர் ர